முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்டயாழ்பாண நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.10.2023**, திங்கட்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
ஞானிகளை உருவாக்க வந்த
ஞான பண்டிதன் அவதார தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலை திங்கள்
குறைவிலா முன்னான்கோர்திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 13ம் நாள், 30.10.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க திருநீலகண்டயாழ்பாண நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி காட்டும் அரங்கன்
ஞானவழிகளை ஏற்று வர
ஞானவாழ்வாக மக்களுக்கு மாற்றம் காண்கும்
4. காண்கவே இந்தவித மாற்றத்துக்கு
கலியினில் அரங்க ஞானியும்
நன்மைகருதி பிரணவக் குடிலை
ஞான சபையாக அமைத்து அருள
5. அருளவே உலக மக்கள்
அனுகி தஞ்சம் அடைந்தால்
அருளுடன் பொருள்வளம் கூடும்
ஆன்ம ஞான பலமும் கூடி
6. கூடியே கரும வினை வென்று
குருவருளால் சகல வளமும் பெற்று
தேடியே பதவி சுகம் யோகம்
தெய்வீகப் பண்புகளும் பெருகி

7. பெருகியே ஞான வாழ்வு தன்னை
பிரணவ சக்தியாக அடைவர்
உருகியே ஞானிகள் பூசையோடு
உயர்வான தருமங்களும் செய்து

8. செய்துமே அரங்கன் திருவடியை
சேவித்து ஞானம் பயில
மெய்அறிவு தெளிவு திடமாகி
மேலவர்கள் போற்றும் வண்ணம்

9. வண்ணமுடன் சக்தி பெருகி
வையகத்தையே மாற்றும் வண்ணம்
மன்னவர்களாய் நிலை தேறி
மரணம் மறுமை வெல்லும்படி

10. வெல்லும்படி வரங்கள் கூடி
விரைந்து அற்புதம் தன்னை
நல்லுலகம் அமைய படைப்பர்
ஞானிகள் படை பெருகி

11. பெருகியே ஞான ஆட்சிதனை
பேருலகம் அடையும்படி செய்வர்
வருங்காலம் வளமாக்கி சிறப்பர்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—